**05.02.2025**

**O.S.No.278/2023**

**வா.சா. 1 :    மாணிக்கம்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

14) சர்வே எண். 584/2எ- யில் உள்ள 70 செண்ட் நிலத்தினை அண்ணாமலை வகையறா தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். மேற்படி நிலத்திற்கு பட்டாவை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. அந்த 70 செண்ட் நிலம் 30.05.1974ல் பாக பிரிவினை செய்து அண்ணாமலை வகையறாரவிற்கு ஒதுக்கப்பட்ட நிலம் என்றும், அதில் அவர்கள் தான் தற்போது வரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

15) பூர்வீக சொத்துக்கள் குறித்து என் தாத்தா பாகம் செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியாது. பாக பிரிவினை செய்த விவரம் எனக்கு தெரியும் என்றும், அதை ஒப்புக்கொண்டால் என் வழக்கிற்கு பாதகமாக முடியும் என்று நான் அதை மறுக்கிறோம் என்றால் சரியல்ல. நானும் பிரதிவாதியும் தனி தனியாக தான் விவசாயம் செய்து வருகிறோம். எனது பெயரிலும், பிரதிவாதிகள் பெயரிலும் தனி தனியாக பட்டா உள்ளது என்று சொன்னால் என் பெயரில் உள்ள சொத்து அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஒப்படைப்பு சொத்து. பிரதிவாதிகள் பெயரில் உள்ள சொத்து பூர்வீக சொத்து.

16) 1ம் பிரதிவாதிக்கு என் அப்பா எழுதி வைத்தாக சொல்லும் சொத்து அது பட்டா மூலம் பாத்தியப்பட்டதா என்றால் அது பூர்வீக சொத்து. 1ம் பிரதிவாதிக்கு என் அப்பா

எழுதி வைத்தாக சொல்லும் சொத்து அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு அவர் அப்பா பட்டா மூலம் பாத்தியப்பட்டது என்றும், 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து அவர் அம்மா மூலம் கிடைத்தது என்றால் அது பூர்வீக சொத்து.

17) நான் கோரியுள்ள பாக பிரிவினையில் 2 வது அயிட்ட சொத்து 1 அயிட்ட சொத்தின் சர்வே எண். 583/4, 575/3 ஆகிய சொத்துக்களை 3ஆக பிரித்து எனக்கு ஒரு பங்கை வழங்குவதில் பிரதிவாதிகளுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னால் அது பூர்வீக சொத்து. 1வது அயிட்ட சொத்தின் சர்வே எண். 584/2எ, 576/7, 579/3 ஆகி சொத்துக்களில் எனக்கு பாகம் பெற உரிமையில்லை என்றும் அதை பொறுத்து தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

18) 1, 2 பிரதிவாதிகள் பெயரில் எழுதி வைத்த தான செட்டில் மெண்ட் பத்திரங்கள் இரண்டை ரத்து செய்ய கோர எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 2 தான பத்திரங்களில் கண்டுள்ள சொத்துக்கள் பாக பிரிவினைக்கு சம்பந்தப்படாத தனிப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.02.05 18:42:00 +0530

**Subordinate Judge, Attur.**